தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

(பதினைந்தாவது பேரவை)

மதிப்பீட்டுக் குழு
2018 – 2020

தொகுப்பு - I

9 முதல் 17 வரையிலான அறிக்கைகள்

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2018 – 2019)

(பதினைந்தாவது பேரவை)

ஒன்பதாவது அறிக்கை

"பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை" குறித்து 2009–2011 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக்குழு (13–வது பேரவை) பேரவைக்கு அளித்த முப்பத்தைந்தாவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை.

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : 15 JUL 2019)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2018 – 2019)

(பதினைந்தாவது பேரவை)

ஒன்பதாவது அறிக்கை

"பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை" குறித்து 2009–2011 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) பேரவைக்கு அளித்த முப்பத்தைந்தாவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை.

பொருளடக்கம்

			பக்கங்கள்
மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு (2018–2019)		...	iii
பாகம்–1	முன்னுரை	...	v
பாகம்–2	"பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை" குறித்து 2009–2011 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) பேரவைக்கு அளித்த முப்பத்தைந்தாவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை.	...	1-2

இணைப்புகள்

இணைப்பு – 1	துறையால் நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்பெற்ற பரிந்துரைகள்	3–12
இணைப்பு – 2	பரிந்துரைகளுக்கான துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப் பெற்றவை	13–29
இணைப்பு – 3	துறையிடமிருந்து பதில் வரப்பெற்று நடவடிக்கைகள் மேலும் தொடரப் பெற வேண்டிய பரிந்துரைகள்	31–37

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு (2018–2019)

(பதினைந்தாவது பேரவை)

(2018–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5–ஆம் நாள் அமைக்கப்பெற்றது)

தலைவர்

1. திரு. தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்

உறுப்பினர்கள்

2. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்
துணை முதலமைச்சர் (அலுவல் காரணமாக)
3. திரு. துரைமுருகன்
தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)
4. திரு. S. செம்மலை
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)
5. திரு. C.V. இராஜேந்திரன்
6. திரு. இ. கருணாநிதி
7. திரு. ஆர். காந்தி
8. திரு. V.S. காளிமுத்து
9. திருமதி ப. சத்யா
10. திரு. சி. சந்திரசேகரன்
11. திரு. எஸ்.எஸ். சரவணன்
12. திரு. M. செல்வராசு
13. திரு. அ. நடராஜன்
14. திரு. பெ. பெரியபுள்ளான் (எ) செல்வம்
15. முனைவர் க. பொன்முடி
16. திரு. கி. மாணிக்கம்
17. திரு. M.K. மோகன்
18. திரு. வி.ஜி. ராஜேந்திரன்
19. திரு. வாகை சந்திரசேகர்

செயலகம்

திரு. கி. சீனிவாசன் . . செயலாளர்

திரு. அ. அய்யன்பெருமாள் . . இணைச் செயலாளர்

திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு (2018–2019)

பாகம் – 1

முன்னுரை

மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக இந்த அறிக்கை பேரவைக்கு அளிக்கப்படுகிறது.

2. இவ்வறிக்கை "பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை" குறித்து 2009–2011 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) 10.02.2011 ஆம் நாளன்று பேரவைக்கு அளித்த முப்பத்தைந்தாவது அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகளை ஆய்வு செய்து அளிக்கப்பெறும் அறிக்கையாகும்.

3. 2018–2019 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு 5.7.2018 ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது.

4. குழு 10.07.2019–ஆம் நாளன்று சென்னையில் கூடி மேலே பத்தி 2–இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகள் மீது துறை எடுத்த நடவடிக்கைப் பட்டியலை ஆய்வு செய்தது.

5. மேற்கூறிய அறிக்கையில் குழு அளித்துள்ள 40 பரிந்துரைகளில் 15 பரிந்துரைகள் துறையால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவை இணைப்பு 1–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

6. 20 பரிந்துரைகள் மீது துறை எடுத்த நடவடிக்கைகளை குழு ஏற்றுக்கொண்டுள்ளது. குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பெற்ற பரிந்துரைகள் பற்றிய விவரங்கள் இணைப்பு 2–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

7. இவ்வறிக்கையில் பாகம் 2–இல் தரப்பெற்றுள்ள காரணங்களுக்காக 5 பரிந்துரைகள் மீது துறை மேலும் நடவடிக்கை தொடர வேண்டுமென குழு முடிவு செய்துள்ளது. துறையால் மேலும் நடவடிக்கை தொடரப்பட வேண்டிய இனங்கள் இணைப்பு 3–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

8. 10.07.2019 அன்று நடைபெற்ற குழுக் கூட்டத்தில் இவ்வறிக்கைக்கு குழு ஒப்புதல் அளித்தது.

சென்னை – 600 009,
நாள்: 10.07.2019.
விகாரி ஆனி 25,
திருவள்ளுவர் ஆண்டு–2050.

தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

அறிக்கை

"பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை" குறித்து 2009–2011 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) பேரவைக்கு அளித்த முப்பத்தைந்தாவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை.

பரிந்துரை எண் 30 பத்தி எண் 75

அனைத்து விடுதிகளிலும் உள்ள காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்திருந்தது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் அக்டோபர் 2012 மாதத்தில் காலியாக இருந்த சுமார் 1255 காலிப்பணியிடங்களை போர்க்கால அடிப்படையில் நிரப்பிடுவதற்கு ஏதுவாக அரசாணை எண்.129, பிவ, மிபிவ(ம) சிபா நலத்துறை, நாள் 6.11.2012, அரசாணை எண்.99, பிவ, மிபிவ.(ம) சிபா.நலத்துறை, நாள் 6.11.2012 மற்றும் அரசாணை எண்.130 பிவ, மிபிவ(ம) சிபா நலத்துறை, நாள். 7.11.2012 ஆகியவைகளின்படி அரசால் மாநில அளவிலான தேர்வுக்குழு அமைக்கப்பட்டு, மாவட்ட தலைநகரங்களில் நேர்காணல்கள் நடத்தப்பட்டு, சுமார் 780 பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன. தற்போது பட்டதாரி காப்பாளர் மற்றும் இடைநிலை காப்பாளர் காலிப் பணியிடங்களை தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் (TRB) நிரப்புவதற்கு அரசாணை (நிலை) எண் 20 பிவ, மிபிவ (ம) சிபா நலத்துறை நாள் 26.02.2019 ல் அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டதை தொடர்ந்து பணியிடங்களை உடனடியாக நிரப்பிட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

விடுதிகளில் உள்ள காலிப்பணியிடங்கள் நிரப்ப துரித நடவடிக்கை எடுத்து, நிரப்பப்பட்டது குறித்து ஓர் அறிக்கையினை குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று குழு மீண்டும் வலியுறுத்துகிறது.

பரிந்துரை எண் 31 பத்தி எண் 76

2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையின்படி பணியாளர் குழுவின் ஒப்புதல் வாங்க வேண்டும் என்ற நிபந்தனையிலிருந்து விடுதிகளில் உள்ள கீழ்மட்ட பணியாளர் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு அவற்றின் கடமைகளின் முக்கியத்துவத்தை கருதி விலக்களிக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்திருந்தது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

குழுவின் பரிந்துரைக்குப் பின் 2012 ஆம் ஆண்டில் விடுதிகளில் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு 780 காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டன. மேலும் தற்போது பட்டதாரி காப்பாளர் மற்றும் இடைநிலை காப்பாளர் காலிப் பணியிடங்களை தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் (TRB) நிரப்புவதற்கு அரசாணை (நிலை) எண் 20 பிவ, மிபிவ (ம) சிபா நலத்துறை நாள் 26.02.2019 ல் அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டதை தொடர்ந்து பணியிடங்களை உடனடியாக நிரப்பிட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. எனவே காலிப் பணியிடங்களை நிரப்பிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

விடுதிகளில் உள்ள கீழ்மட்டப் பணியாளர்களை நிரப்புவதற்கு பணியாளர் குழுவின் ஒப்புதல் பெற வேண்டும் என்பதிலிருந்து விலக்களிக்க நடவடிக்கை எடுக்க குழு ஏற்கெனவே பரிந்துரை செய்துள்ளது. இப்பரிந்துரை குறித்து அரசு எடுத்த நடவடிக்கை குறித்த விவர அறிக்கையை 8 ஆண்டுகள் காலம் தாழ்த்தி குழுவிற்கு துறை அனுப்பி உள்ளதற்கு குழு தனது அதிருப்தியை தெரிவித்துக் கொள்கிறது. பரிந்துரை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய விவரத்தை ஒரு மாத காலத்திற்குள் குழுவிற்கு அனுப்ப குழு வலியுறுத்துகிறது.

பரிந்துரை எண் 33 பத்தி எண் 80

இரவுக் காவலர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்படாத விடுதிகளுக்கு உடனடியாக பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்திருந்தது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

2005–2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் துவங்கப்பட்ட 462 பிவ. மி.பி.வ (ம) சீம நல மாணவர் விடுதிகளுக்கு, தலா ஒரு காவலர் (ம) ஏவலர் பணியிடத்தினை தோற்றுவிப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

அரசின் பரிசீலனையில் உள்ள கருத்துருவின் மீது விரைவில் முடிவெடுத்து 8 ஆண்டுகள் முடிந்துள்ள நிலையில் குழுவின் பரிந்துரை அரசின் பரிசீலனையில் உள்ளதாக துறை தெரிவித்துள்ள பதிலை குழு ஏற்பதாக இல்லை. 462 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நல மாணவர் விடுதிகளுக்கு இரவுக் காவலர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டுமென்று குழு மீண்டும் வலியுறுத்துகிறது.

பரிந்துரை எண் 35 பத்தி எண் 84

50 மாணவர்களுக்கு மேல் 100 மாணவர்களுக்குள்ளாக உள்ள விடுதிகளில் ஒரு உதவி சமையலர் பணியிடம் ஒப்பளிப்பு செய்து நியமனம் செய்யப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்திருந்தது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

மாவட்டங்களிலுள்ள விடுதிகளிலிருந்து ஒப்பளிக்கப்பட்ட சமையலர் மற்றும் உதவி சமையலர் பணியிடங்களின் விவரங்கள் பெறப்பட்டு அதனடிப்படையில் அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டதை தொடர்ந்து அரசாணை எண் 78 பி.வ, மி.பி.வ (ம) சி.பா நலத்துறை நாள் 20.11.2018ல் மொத்தம் 196 சமையலர் பணியிடங்கள் கூடுதலாகவும் புதிதாகவும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவிக்கப்படுகிறது.

குழுவின் பரிந்துரையின்படி 50 மாணவர்களுக்கு மேல் 100 மாணவர்களுக்குள்ளாக உள்ள விடுதிகளில் உதவி சமையலர் கூடுதலாக நியமிக்கப்பட்டுள்ளனரா என குழு அறிய விரும்புகிறது. மேலும் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களில் சமையலர்கள் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளார்களா என்பதற்கான அறிக்கையை அளிக்க குழு வலியுறுத்துகிறது.

பரிந்துரை எண் 36 பத்தி எண் 88

இலவச வீட்டுமனைப்பட்டா பெற்ற பயனாளிகள் அந்நிலத்தில் வீடுகள் கட்டி உள்ளனரா என்பது குறித்து அனைத்து மாவட்டங்களிலும் ஒரு சிறப்பு ஆய்வினை துறை மேற்கொள்ள வேண்டுமென்றும் இது குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்க வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்திருந்தது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

இலவச வீட்டுமனைப்பட்டா 2017–2018 ஆண்டு முடிய மொத்தம் 2,22,411 எண்ணிக்கையிலான பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது, அவற்றில் 36,136 பயனாளிகள் வீடு கட்டி வாழ்ந்து வருகின்றனர் என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்ட அனைத்து பயனாளிகளும் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் வீடுகள் கட்டி வாழ்வதை துறை உறுதி செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அது குறித்த ஓர் அறிக்கை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பெறவேண்டும் என்று குழு மீண்டும் வலியுறுத்துகிறது.

சென்னை – 600 009,
நாள்: 10.07.2019.
விகாரி ஆனி 25,
திருவள்ளுவர் ஆண்டு–2050.

தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

இணைப்பு–I

துறையால் நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்பெற்ற பரிந்துரைகள்

இணைப்பு – 1

துறையால் நிறைவேற்றப் பெற்றதாக கருதப்பெற்ற பரிந்துரைகள்

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1	3	17	கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி அரசு மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதியில் மாற்றுத் திறனாளி மாணவியர் பயன்படுத்த ஏற்றவாறு கழிவறைகள் அமைத்துத் தரப்படவேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.	அரசாணை எண் 08 பி.ப, மி.பி.ப (ம) சி.பா நலத்துறை நாள் 04.02.2013 ல் ரூ. 128.11 இலட்சத்தில் கிருஷ்ணகிரி மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதிக்கு அரசு சொந்த கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டு பொதுப்பணித்துறை மூலம் கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட விடுதியில் மாற்றுத் திறனாளி மாணவியர் பயன்படுத்த கூடிய வகையில் கழிப்பறை மற்றும் மாற்று திறனாளிகளின் வசதிக்காக படிக்கட்டின் அருகில் ரேம்ப் கட்டி முடிக்கப்பட்டு கடந்த 07.03.2017 திறக்கப்பட்டு தற்போது செயல்பாட்டில் உள்ளது.	நிறைவேற்றப்பட்டதாக கருதலாம்.
2	4	19	கிருஷ்ணகிரி மாவட்டம், ஊளகிரி அரசு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு கட்டப்படும் கட்டடத்திற்கு எல்லை நிர்ணயம் உடனடியாக செய்யப்படவேண்டுமென்றும், தேசிய நெடுஞ்சாலை மீது இவ்விடுதி அமைந்துள்ளதால் பாதுகாப்பினைக் கருதி சுற்றுச்சுவர் கண்டிப்பாக கட்டித்தரப்படவேண்டுமென்றும் அணுகுசாலையினையும் சிவர அமைத்துத் தரவேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.	1) எல்லை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2) சுற்றுச்சுவருடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு 22.9.2011 முதல் விடுதி புதிய கட்டடத்தில் இயங்கி வருகிறது. 3) விடுதிக்குரிய அணுகுசாலை அமைக்கப்பட்டுள்ளது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3	5	21	சம்பந்தப்பட்ட போச்சம்பள்ளி வட்டாட்சியர் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டம், மகாராஜகடை அரசு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்டுவதற்கான நிலத்தினை விரைவாக தெரிவு செய்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலருக்கு தெரிவிக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகத்தால் மகாராஜாகடை அரசு பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்ட நரளப்பள்ளி கிராமம் S.No.581/2, 0.20.5 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டு பொதுப்பணித்துறை வசம் கடந்த 5.7.2012 அன்று ஒப்படைக்கப்பட்டது. இதனை தொடர்ந்து அரசாணை எண் 8 பி,ப, மி.பி.ப (மு) சி.பா நலத்துறை நாள் 04.02.2013 ல் ரூ. 75.10 இலட்சத்தில் சொந்த கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டு பொதுப்பணித்துறை மூலம் கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டதை தொடர்ந்து கடந்த 12.06.2015 அன்று திறக்கப்பட்டு தற்போது மாணவர்களின் பயன்பாட்டில் உள்ளது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	7	27	தருமபுரி மாவட்டம் தொப்பூர் அரசு மிகப்பிற்பட்டோர் நல மாணவர் விடுதியில் உள்ள கட்டடப் பழுதுகளை சரிசெய்யவும் இதர அடிப்படை வசதிகளை செய்து தரவும் துறை, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. இதுகுறித்து அறிக்கை ஒன்று குழுவிற்கு அளிக்கப்படவேண்டும்.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தொப்பூர் மிகப்பிற்பட்டோர் நல மாணவர் விடுதி கட்டட பராமரிப்பு பணிக்கென 2013–2014 ஆம் ஆண்டில் ரூ.4.50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு விடுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து பராமரிப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு விட்டது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
5	8	32	நெல்லிக்குப்பம் காடாம்புலியூர் மற்றும் விருத்தாச்சலம் ஆகிய இடங்களில் உள்ள மாணவியர் விடுதிகளுக்கு மாணவியரின் பாதுகாப்பினைக் கருதி வரும் நிதியாண்டிலேயே (2011–2012) சுற்றுச்சுவர் முன்னுரிமை அடிப்படையில் கட்டித்தரப்படவேண்டுமென்றும் இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி குழுவிற்கு அறிக்கை ஒன்றினை அளிக்கவேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1) கடலூர் மாவட்டம், நெல்லிக்குப்பம் அரசு பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதிக்கு 2010–2011 ம் ஆண்டில் பகுதி II திட்டத்தின் கீழ் ரூ.3.40 லட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பொதுப்பணித்துறை மூலம் சுற்றுச்சுவர் கட்டிமுடிக்கப்பட்டுவிட்டது. 2) கடலூர் மாவட்டம், காடாம்புலியூர் அரசு பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதிக்கு சுற்றுச்சுவர் கட்டிமுடிக்கப்பட்டு விட்டது. 3) கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் அரசு பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதிக்கு 2012–2013 ம் ஆண்டில் பகுதி II திட்டத்தின் கீழ் ரூ.4.84 லட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்ட அரசாணை எண். 119, பிவ, மிபிவ (ம) சி.பா நலத்துறை நாள் 10.10.2012–ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பொதுப்பணித்துறை மூலம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
6	9	33	விழுப்புரம் மாவட்டம் கருந்தாலக்குறிச்சி அரசு பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதிக்கு சுற்றுச்சுவர் அமைத்துத்தரப்படவேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
விழுப்புரம் மாவட்டம் கருந்தாலக்குறிச்சி அரசு பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதிக்கு 2012–2013 ம் ஆண்டில் பகுதி II திட்டத்தின் கீழ் ரூ.2.70 லட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்ட அரசாணை எண். 119, பிவ, மிபிவ (ம) சிபா நலத்துறை நாள் 10.10.2012–ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பொதுப்பணித்துறை மூலம் சுற்றுச்சுவர் கட்டிமுடிக்கப்பட்டது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
7	10	35	காஞ்சிபுரம் மாவட்டத்தில் தற்போது சுற்றுச்சுவர் இல்லாத 11 விடுதிகளில் அடங்கியுள்ள இரண்டு மாணவியர் விடுதிகளுக்கும் முன்னுரிமை அளித்து அனைத்து 11 விடுதிகளுக்கும் விரைவில் சுற்றுச்சுவர் அமைத்துதரப்படவேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
மாநிலம் முழுவதும் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் முதற்கட்டமாக மாணவியர் விடுதிகள் அனைத்திற்கும் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவ்வாறே படிப்படியாக அனைத்து மாணவியர் விடுதிகளுக்கும் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுவிட்டது, அவற்றில் காஞ்சிபுரம் மாவட்டத்தை பொறுத்தவரை மதிப்பீட்டு குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 2 மாணவியர் விடுதிகள் உட்பட அனைத்து மாணவியர் விடுதிகளுக்கும் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுவிட்டது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
8	11	36	திருவண்ணாமலை மாவட்டத்தில், மருதநாடு மற்றும் பிருதூர் வந்தவாசி வட்டம் ஆகிய இடங்களில் உள்ள அரசு பள்ளி மாணவியர் (மி.ப.ந) விடுதிகள் உட்பட சுற்றுச்சுவர் இல்லாத ஐந்து விடுதிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டித்தரப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
திருவண்ணாமலை மாவட்டத்தில் மருதநாடு மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல பள்ளி மாணவியர் விடுதிக்கு சுற்றுச்சுவர் அரசாணை (நிலை) எண் 119 பி,வ,மி.பி.வ (ம) சி.பா நலத்துறை நாள் 10.10.2012–ல் ரூ.4.03 இலட்சம் ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து பொதுப்பணித்துறை மூலம் சுற்றுச்சுவர் கட்டுப்பட்டுவிட்டது அதேபோன்று மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல பள்ளி மாணவியர் விடுதி வந்தவாசிக்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 2 பி.வ,மி.பி.வ (ம) சி.பா நலத்துறை நாள் 06.01.2015–ல் ரூ.4.73 இலட்சம் ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து பொதுப்பணித்துறை மூலம் சுற்றுச்சுவர் கட்டுப்பட்டுவிட்டது என தெரிவிக்கப்படுகிறது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
9	14	40	கடலூர் மாவட்டம், காடாம்புலியூர் அரசு பிற்பட்டோர் நல மாணவியர் விடுதியில் 60 மாணவிகள் தங்கியுள்ள நிலையில் ஒரு குளியலறை மட்டுமே உள்ளது. இவ்விடுதிக்கு கூடுதலாக குளியலறைகள் உடனடியாக கட்டித்தரப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
2013–2014 ம் ஆண்டில் இவ்விடுதியின் பராமரிப்புக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.2.75 இலட்சம் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இவ்விடுதிக்கு கூடுதல் குளியலறைகள் கட்டப்பட்டு தற்போது மாணவியர்களின் பயன்பாட்டில் உள்ளது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
10	15	42	காஞ்சிபுரம் மாணவியர் பயன்படுத்தும் குளியலறைகளுக்கு கதவுகள் மிகவும் அவசியம் என்ற கருத்தின் அடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் அரசு பிற்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதியின் குளியலறைகளுக்கு உடனடியாக கதவுகள் பொருத்தப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள வாலாஜாபாத் அரசு பிற்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதியின் குளியலறைகளுக்கு கதவுகள் பொதுப்பணித்துறை மூலம் பொருத்தப்பட்டுவிட்டது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
11	18	49	காஞ்சிபுரம் (பெரியார் நகர்) பிற்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி மற்றும் வாலாஜாபாத் அரசு பிற்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதி ஆகிய இரண்டு விடுதிகளிலும் உள்ள சூரிய ஒளி சுடுநீர் கருவிகளை விரைவில் சரி செய்து இயங்கச் செய்ய வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
காஞ்சிபுரம் (பெரியார் நகர்) பிற்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி மற்றும் வாலாஜாபாத் பிற்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதி ஆகிய இரண்டு விடுதிகளிலும் உள்ள சூரிய ஒளி சுடுநீர் கருவிகளை பழுது நீக்கி தற்போது நல்லமுறையில் இயங்கி வருகிறது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
12	19	50	பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் கீழ் செயல்படும் அனைத்து மாணவ, மாணவியர் விடுதிகளில் உள்ள அனைத்து உபகரணங்கள் மற்றும் கருவிகளை பராமரிப்பு செய்து பழுதுகள் இல்லாமல் செயல்பட செய்வதற்கு ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு விடுதிக்கும் ரூ.10,000 வீதம் பராமரிப்பு செலவிற்கு என தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் செயல்படும் அனைத்து மாணவ, மாணவியர் விடுதிகளில் உள்ள அனைத்து உபகரணங்கள் மற்றும் கருவிகளை பராமரிப்பு செய்து பழுதுகள் இல்லாமல் செயல்பட செய்வதற்கு அரசாணை எண் 20 பி.வ, மி.பி.வ (ம) சி.பா நலத்துறை நாள் 23.02.2015–ன் மூலம் முன்பணமாக தலா ஒரு விடுதிக்கு ஆண்டு தோறும் ரூ.15,000/– விதம் பராமரிப்பு செலவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இவற்றை தவிர்த்து கல்லூரி விடுதிகளுக்கு அதாவது 5 ஆண்டுகளுக்கு முன்பு அரசு கட்டடம் கட்டப்பட்டு செயல்பாட்டில் உள்ள 99 விடுதிகளுக்கு முன்பணமாக வழங்கப்பட்டு வரும் ரூ. 15,000/–த்தை உயர்த்தி ரூ.20,000/– முன்பணத் தொகையாக வழங்க அரசாணை எண் 65 பி.வ, மி.பி.வ (ம) சி.பா நலத்துறை நாள் 12.10.2018–ன் மூலம் அரசால் ஆணையிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
13	21	52	விழுப்புரம் மாவட்டத்தில் 18 விடுதிகளுக்கு எரிவாயு அடுப்பு மற்றும் இணைப்பு வழங்கப்படாமல் உள்ளதாக குழு அறிந்தது. இவ்விடுதிகளுக்கு விரைவில் எரிவாயு அடுப்பு மற்றும் இணைப்பு வழங்கப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
விழுப்புரம் மாவட்டத்தில் எரிவாயு இணைப்பு இல்லாமல் இயங்கி வந்த விடுதிகளுக்கு 2011–2012 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ.5,60,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து அனைத்து 18 விடுதிகளுக்கும் எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது என தெரிவிக்கப்படுகிறது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
14	24	59	கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி அரசு பிற்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதிக்கு விரைவில் புதிய சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
2014–2015 ஆண்டில் பகுதி 2 திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி அரசு பிற்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதிக்கு புதிய சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டுவிட்டது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
15	28	69	கிருஷ்ணகிரியில் கூடுதலாக ஒரு மகளிர் கல்லூரி விடுதி துவங்கப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
குழுவின் பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்பட்டு மாணவியர் கல்லூரி விடுதியின் தேவையை ஆராய்ந்து மாணவியரின் கல்வி தேவையினை பூர்த்தி செய்திடும் வகையில் கிருஷ்ணகிரியில் தலா 100 எண்ணிக்கை கொண்ட இரண்டு மாணவியர் விடுதிகள் புதிதாக திறக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகின்றன (அரசாணை எண் 135 பி.வ, மி.பி.வ (ம) சி.பா நலத்துறை நாள் 28.11.2012). 1. மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, கிருஷ்ணகிரி (2012–2013). 2. மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல தொழில் நுட்ப கல்லூரி மாணவியர் விடுதி கிருஷ்ணகிரி (2012–2013).	நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

இணைப்பு–II

பரிந்துரைகளுக்கான துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றவை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – 2

பரிந்துரைகளுக்கான துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பெற்றதாக கருதப்பெற்றவை

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1	1	14	எனவே, இனிவருங்காலங்களில் விடுதிகளுக்கு கட்டடம் கட்டித் தரும் நடவடிக்கையின் நிலத்தினை தெரிவு செய்து தயார் நிலையில் வைத்த பின்னரே அரசுக்கு உரிய கருத்துருவினை அனுப்ப வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. இது குறித்து அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்படவேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.	குழுவின் பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட்டது. குழுவின் பரிந்துரையினை பின்பற்றி விடுதிகளுக்கு சொந்த கட்டடம் கட்ட தேவையான நிலத்தினை தேர்வு செய்த பின்னர், அவ்விடத்தில் விடுதிக்கு சொந்த கட்டடம் கட்ட அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு விடுதி கட்டுமானத்திற்கான அனுமதி ஆணை பெறப்பட்டு வருகிறது. அதன்படி கடந்த 2014–2015 ஆம் ஆண்டில் 10 விடுதிகளுக்கு சொந்த கட்டடம் கட்ட தேவையான நிலம் தேர்வு செய்யப்பட்ட பின்பு அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு விடுதிக்கு சொந்த கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு தற்போது செயல்பாட்டில் இருந்து வருகிறது. இந்நடைமுறையே தொடர்ந்து தற்போதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
2	2	15	விடுதிகளுக்கு கட்டடம் கட்டுவதற்கான வடிவமைப்பினை இறுதி செய்யும்போதே விடுதிக்கான சுற்றுச்சுவர் கட்டப்படுவதற்கும், பின்புறம் அமையும் சுற்றுச்சுவர் சற்று உயரமாக கட்டப்படுவதற்கும், மாற்றுத் திறனாளி மாணவர்களின் வசதிக்காக படிக்கட்டின் அருகில் ரேம்ப் (ramp) கட்டித் தருவதற்கும் வழிவகை செய்யப்படவேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தற்போது விடுதிகளுக்கு கட்டடம் கட்டுவதற்கான வடிவமைப்பிலேயே (Type Design) விடுதிக்கான சுற்றுச்சுவர் மற்றும் மாற்றுத்திறனாளி மாணவர்களின் வசதிக்காக படிக்கட்டின் அருகில் ரேம்ப் கட்டுதல் ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன. இதற்கான தொகை மதிப்பீட்டிலும் சேர்க்கப்பட்டு விடுதி கட்டடங்கள் கட்டப்படுகின்றன.	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
3	6	24	விடுதிகளின் கட்டடப் பராமரிப்பிற்கான நிதியினை உயர்த்தி ஒவ்வொரு விடுதிக்கும் ஆண்டொன்றுக்கு தலா ரூ.30,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்படவேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
விடுதிகளின் கட்டட பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஆண்டுதோறும் பொதுப்பணித்துறை கணக்கு தலைப்பில் ரூ. 6 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு அத்தொகையில் விடுதிகளில் உரிய பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் கூடுதலாக கடந்த 2013–2014 ஆம் ஆண்டில் அரசாணை எண் 96 பி.வ, மி.பி.வ (ம) சி.பா நலத்துறை நாள் 22.10.2013–ன் மூலம் ரூ.25.00 கோடியும், 2015–2016 ஆம் ஆண்டு ரூ. 2 கோடியும் மற்றும் நடப்பாண்டில் (2018–2019) ரூ. 5 கோடியும் ஒதுக்கப்பட்டு அரசு கட்டடங்களில் இயங்கும் விடுதிகளில் பராமரிப்பு பணிகள் உடனுக்குடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
4	12	37	மாநில அளவில் எத்தனை விடுதிகளுக்கு சுற்றுச் சுவர் இல்லை என்பது குறித்து ஒரு கணக்கெடுப்பினை மேற்கொண்டு சுற்றுச் சுவர் இல்லாத விடுதிகளுக்கு குறிப்பாக, மாணவியர் விடுதிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டி தர துறை விரிவாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
மாநிலம் முழுவதும் மொத்தம் 1348 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 1271 விடுதிகள் தற்போது அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அரசு கட்டடங்களில் செயல்பட்டு வரும் 473 மாணவியர் விடுதிகளில் சுற்றுச்சுவர் இல்லாத மாணவியர் விடுதிகளின் விவரம் பெறப்பட்டு முதற்கட்டமாக அரசாணை (நிலை) எண் 2 பி.வ,மி.பி.வ (ம) சி.பா நலத்துறை நாள் 06.01.2015-ல் 15 மாணவியர் விடுதிகளுக்கு ரூ.141.09 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டது. அதே போன்று எஞ்சிய 21 மாணவியர் விடுதிகளுக்கு அரசாணை (நிலை) எண் 64 பி.வ,மி.பி.வ (ம) சி.பா நலத்துறை நாள் 12.10.2018-ல் ரூ.235.28 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுவிட்டது. தற்போதைய நிலையில் அரசு கட்டடத்தில் இயங்கும் அனைத்து மாணவியர் விடுதிக்கும் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுவிட்டது.	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
5	13	39	விடுதிகளில் பணிபுரிந்து வரும் இரவுக் காவலர் மாலை 6.00 மணி முதல் மறுநாள் காலை 6.00 மணி வரை விடுதியில் தங்குவதை உறுதி செய்ய மாவட்ட நல அலுவலர் திடீர் ஆய்வினை அவ்வப்போது மேற்கொள்ள வேண்டுமென்றும், அவ்வாறு இரவில் தங்கத் தவறியவர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
விடுதிகளில் பணிப்புரிந்து வரும் இரவுக் காவலர் மாலை 6.00 மணி முதல் மறுநாள் காலை 6.00 மணி வரை விடுதியில் தங்குவதை அவ்வப்போது உறுதி செய்திட அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு தகுந்த அறிவுரைகள் ஆய்வு கூட்டங்களின் போதும் வழங்கப்பட்டுள்ளது.	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
6	16	43	மாணவியர் விடுதிகளில் குளியலறை கதவுகள் இல்லாமலோ அல்லது பழுதடைந்ததோ உள்ள விடுதிகளைக் கண்டறிந்து அவற்றை சரி செய்து தர வேண்டுமென்றும், பொதுவாக கழிவறை மற்றும் குளியலறைகளுக்கு அலுமினிய கதவுகள் பொருத்தப்பட வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
ஆண்டுதோறும் அரசு கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளில் ஏற்படும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அரசால் ரூ. 6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதுடன், அவ்வப்போது கூடுதலாக விதி 110ன் கீழ் கடந்த 2012–2013 ஆண்டில் ரூ. 25 கோடி மற்றும் 2018–2019 ஆண்டில் ரூ. 5 கோடி நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு விடுதிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குழுவின் பரிந்துரையினை கருத்தில் கொண்டு மாணவியர் விடுதிகளில் குளியலறை கதவுகள் தற்போது (PVC) பொருத்தப்பட்டும் மாணவியர் விடுதிகளில் கதவுகளை பழுது நீக்கிட முன்னுரிமை அளித்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தெரிவிக்கப்படுகிறது.	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
7	17	47	கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள விடுதிகளுக்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களுக்குப் பதிலாக Water Treatment Plant அமைத்துத் தருவது குறித்து அரசு ஒரு ஆய்வினை மேற்கொண்டு தக்க ஏற்பாட்டினை செய்து தர வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இயங்கி வரும் விடுதிகளில் மாணவ / மாணவியர் குளிப்பதற்கு மற்றும் கழிவறைகள் பயன்பாட்டிற்கு தேவையான நீரினை ஆழ்துளை கிணற்று நீரைக் கொண்டு பூர்த்தி செய்யப்படுகிறது. இவற்றை தவிர்த்து விடுதிகளில் பயிலும் மாணவ / மாணவியரின் குடிநீர் தேவைக்கான நீரினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மற்றும் ஊராட்சிகளில் வழங்கப்படும் குடிநீர் குழாய்களின் இணைப்புகள் மூலம் பெறப்படும் நீரினையே பயன்படுத்தப்பட்டு வருகிறது. அவ்வாறு குடிநீர் குழாய் இணைப்புகள் இல்லாத விடுதிகளில் லாரி மூலமாகவே அல்லது இதர வழிகள் மூலம் தண்ணீர் பெற்று குடிநீர் தேவையை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும் இவ்வாறு பெறப்படும் குடிநீர், குடி தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் மூலம் சுத்திகரிப்பு செய்யப்பட்டு அதன் பின்னர் மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே விடுதி மாணவ, மாணவியர்க்கு குடிதண்ணீர் தேவையை எவ்வித குறைபாடுமின்றி நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதை தெரிவிக்கப்படுகிறது.	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
8	20	51	இம்மாநிலத்தில் பிற்பட்டோர் நல மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத் துறையின் கீழ் இயங்கி வரும் 1238 விடுதிகளில் எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்கப்படாமல் உள்ள விடுதிகளுக்கு விரைவில் அவை வழங்கப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
எரிவாயு இணைப்பு இல்லாமல் உள்ள விடுதிகளின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு அவ்விடுதிகள் அனைத்திற்கும் எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது என தெரிவிக்கப்படுகிறது.	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
9	22	53	விடுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள தொலைக்காட்சி பெட்டிகளுக்கு பொதிகை அலைவரிசை நிகழ்ச்சிகளை மட்டுமே மாணவர்கள் பார்க்க இயலும் வகையில் இணைப்புகள் வழங்கப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக்குழுவால் பொதிகை அலைவரிசை மூலம் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளை மட்டுமே விடுதி மாணவ / மாணவியர்கள் கண்டுகளிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதால் கேபிள் இணைப்பு யாதும் விடுதிகளுக்கு வழங்கி பிற அலைவரிசையின் மூலம் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளை விடுதி மாணவ / மாணவியர்கள் பார்க்க அனுமதிக்கக் கூடாது எனவும் அனைத்து விடுதி காப்பாளர் / காப்பாளினிகளுக்கு தக்க அறிவுரைகள் வழங்குமாறும் அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர் (பி2/ 4723/2010, நாள் 1.4.2011).	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
10	23	56	சமையல் செய்வதற்கு பித்தளை பாத்திரங்கள் பயன்படுத்தும் விடுதிகளுக்கு விரைவில் அலுமினியம் / எவர்சில்வர் பாத்திரங்கள் வழங்கப்பட வேண்டுமென்றும் துறையின் நல அலுவலர் தொண்டு நிறுவனங்களை அணுகி இம்மாதிரியான சிறுசிறு உதவிகளை பெறுவதற்கான முயற்சியை மேற்கொள்ளவேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.	விடுதிகளில் சமையல் செய்வதற்கு தேவையான பாத்திரங்கள் விடுதி துவக்கப்படும் சமயத்தில் வழங்கப்பட்டு வருவது நடைமுறையில் உள்ள திட்டமாகும். அவ்வாறு தற்போது புதிதாக விடுதிகள் துவக்கப்படும் நிலையில் அலுமினியம் / எவர்சில்வர் பாத்திரங்கள் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்னர் துவக்கப்பட்ட விடுதிகளில் பழுதடைந்த சமையல் பாத்திரங்களுக்கு பதிலாக புதிய பாத்திரங்கள் அளிக்கும் பொருட்டு தேவை குறித்து விவரம் பெறப்பட்டு அதன் அடிப்படையில் 500 விடுதிகளில் உள்ள (300 பிற்படுத்தப்பட்டோர் நல + 150 மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல + 50 சீர்மரபினர் நல விடுதிகள்) பழுதடைந்த உபயோகமற்ற பாத்திரங்களுக்கு பதிலாக அலுமினியம் / எவர்சில்வர் பாத்திரங்களாக வாங்கி வழங்கிட ஒரு விடுதிக்கு ரூ.10,000/– வீதம் மொத்தம் ரூ.50,00,000/–(ரூபாய் ஐம்பது லட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசால் ஆணையிடப்பட்டு விடுதிகளுக்கு புதிய எவர்சில்வர் பாத்திரங்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண்8, பிவ மிபிவ (ம) சிபா நலத்துறை நாள்.20.01.2012). மேலும் பழுதடைந்த பாத்திரங்களை மாற்றி புதிய பாத்திரங்கள் வாங்க ஆண்டுதோறும் மாவட்டங்களுக்கு 24. Materials and supplies கணக்கு தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
11	25	61	அனைத்து மாணவ, மாணவியர் விடுதிகளிலும் வீணாகும் நீரினைக் கொண்டு வளாகத்திற்குள் காய்கனி தோட்டம் (kitchen garden) அமைக்கும் பணியை நிறைவேற்றும் வகையில் அனைத்து மாவட்ட நல அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றினை துறை அனுப்ப வேண்டுமென குழு பரிந்துரை செய்வதுடன், அதன் நகல் ஒன்றினை குழுவிற்கு அளிக்குமாறும் தெரிவிக்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கட்டுப்பாட்டில் சொந்தக் கட்டடங்களில் இயங்கும் விடுதிகளில் சுற்றுப்புறச் சூழலை தூய்மையாகவும், பாதுகாப்பாகவும் வைத்துக்கொள்ளும் பொருட்டும் சமையல் மற்றும் குளியலறைகளிலிருந்து வெளியாகும் தண்ணீரைக் கொண்டு தோட்டம் அமைத்து காய்கறிகளை பயிரிட்டு பராமரிக்கவும் அதில் விளையும் காய்கறிகளைக்கொண்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளில் தங்கிக் கல்வி பயிலும் மாணவ / மாணவியர்களுக்குப் பயன்படுத்துமாறு தக்க அறிவுரைகளை அனைத்து காப்பாளர் / காப்பாளினிகளுக்கும் வழங்குமாறு அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களைக் இவ்வலுவலக நேர்முக கடித எண் மி2/ 782/2011 நாள் 05.02.2011ன் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆண்டுதோறும் நடைபெறும் ஆய்வுக்கூட்டங்களில் இதுகுறித்து அறிவுரைகள் வழங்கப்படுகிறது.	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் கருக்கம் (4)
12	26	64	அனைத்து விடுதிகளிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஆண்டுக்கு மூன்று முறை மருத்துவப் பரிசோதனை செய்யப்படுவதையும், அதற்கான நலவாழ்வு குறிப்பு அட்டை சரிவர பராமரிக்கப்படுவதையும் துறை உறுதி செய்து கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			ஆண்டுதோறும் மூன்று கட்டங்களாக விடுதிகளில் தங்கி பயிலும் அனைத்து மாணவ / மாணவியருக்கும் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. விடுதி மாணவ / மாணவியர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட விவரங்கள் மருத்துவ நலவாழ்வு அட்டையில் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
13	27	67	விடுதியில் தங்கி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஆண்டிற்கொருமுறை சுற்றுலா செல்வதற்கான அனுமதி விரைவில் பெற்றுத் தரப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

		துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
		விடுதியில் தங்கி பயிலும் மாணவ, மாணவியர் சுற்றுலா செல்வதற்கு அனுமதி கோரப்படும் பட்சத்தில் உடனுக்குடன் அனுமதி வழங்கிட அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கும் ஆய்வு கூட்டங்களில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
14	29	70	திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், மேல்ராவந்தவாடி கிராமத்தில் நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த மாணவ/மாணவியருக்கு தனித்தனியாக விடுதிகள் அமைக்க இவ்வலுவலக ந.க.எண்.2/36537/2009 நாள்.23.4.2010 இல் சென்னை மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையருக்கு முன் மொழிவு அனுப்பப்பட்டுள்ளதாக குழு அறிந்தது. இம்முன்மொழிவிற்கு அரசின் ஒப்புதலை பெற்று விரைவில் நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த மாணவ / மாணவியருக்கு விடுதிகள் அமைக்கப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம் வட்டம், மேல்ராவந்தவாடி கிராமத்தில் வசித்து வந்த பெரும்பாலான நரிக்குறவர் இனத்தைச் சார்ந்த மக்கள் இடம் பெயர்ந்து சென்று விட்டதால் தற்போது குறைந்த எண்ணிக்கையிலேயே நரிக்குறவர் இனமக்கள் வசித்து வருகின்றனர். மேலும் இக்கிராமத்திலிருந்து 15 கிலோ மீட்டர் சுற்றளவில் 3 விடுதிகள் இயங்கி வருகின்றன மாவட்டத்தில் மொத்தம் 49 விடுதிகள் (பி.வ– 14, மி.பி.வ– 34, சீ.ம–1) செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட 49 விடுதிகளில் மி.பி.வ / சீ.ம மாணவ / மாணவியர்களுக்கு இடஒதுக்கீட்டின்படி அனுமதிக்கப்பட்ட இடங்களில் நரிக்குறவர் இனத்தை சார்ந்த மாணவ/மாணவியர் எவரேனும் சேர்க்கை கோரி விண்ணப்பிக்கும் பட்சத்தில் உடன் சேர்க்கை மேற்கொண்டு தொடர்ந்து தங்கி பயில அனுமதிக்கப்படும் என்பதை தெரிவிக்கப்படுகிறது.	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
15	32	79	இரவுக் காவலர் பதவியின் முக்கியத்துவத்தைக் கருதி அப்பதவிப் பணியிடங்கள் காலியாக உள்ள விடுதிகளுக்கு குறிப்பாக, மாணவியர் விடுதிகளுக்கு உடனடியாக இரவுக் காவலர் பணியமர்த்த வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	தற்போது மாநிலம் முழுவதும் அனுமதிக்கப்பட்ட காவலர் பணியிடங்களின் எண்ணிக்கை 918 ஆகும் அவற்றில் 790 பணியிடங்களில் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர் மீதமுள்ள 145 காலிப்பணியிடங்களை முதுநிலையிலுள்ள சமையலர்களைக் கொண்டு நிரப்பிட பணி நியமன அலுவலர்களான சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்து அவ்வப்போது நடைபெறும் ஆய்வு கூட்டங்கள் மற்றும் கடிதங்கள் வாயிலாகவும் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகிறது.	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
16	34	81	விடுதிகளில் பணியமர்த்தப்பட்டுள்ள இரவுக் காவலர் / காப்பாளினி இரவில் விடுதியில் தங்குகின்றனரா என்பதை அவ்வப்போது நல அலுவலர் திடீர் ஆய்வினை மேற்கொண்டு உறுதி செய்து கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.	இரவு நேரங்களில் (மாலை 5 முதல் காலை 7 மணி வரை) விடுதியில் விடுதிக்காவலர், சமையலர், காப்பாளர் காப்பாளினி இவர்களில் யாரேனும் ஒருவர் விடுதியில் மாணவ, மாணவியரின் பாதுகாப்பிற்காக தங்குவதை விடுதி காப்பாளர் / காப்பாளினிகள் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்றும், இதில் சுணக்கம் காட்டும் காப்பாளர் / காப்பாளினிகள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இவ்வலுவலக 17.6.2014 நாளிட்ட சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
17	37	91	2009 ஆம் ஆண்டிலேயே இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் நில எடுப்பு செய்வதற்கு மாவட்ட ஆட்சித்தலைவருக்கான அதிகார வரம்பினை ரூ.20 இலட்சம் என்பதிலிருந்து ரூ.40 இலட்சமாக உயர்த்துவதற்கு அரசுக்கு அனுப்பப்பட்ட கருத்துரு இன்னமும் பரிசீலனையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மீதான நடவடிக்கையை விரைவுபடுத்தி நில எடுப்பு செய்வதற்கான மாவட்ட ஆட்சித் தலைவரின் அதிகார வரம்பினை உயர்த்தித் தர ஆணை வெளியிடப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் நில மதிப்பினை நிர்ணயம் செய்வதற்கு மாவட்ட குழுவிற்கு வழங்கப்பட்ட வரையறை ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடியாகவும் ரூ.1 கோடிக்கு மேற்பட்ட இனங்களில் மாநில குழுவிற்கும் உயர்த்தி அரசாணை (நிலை) எண் 103 வருவாய்த்துறை நாள் 12.04.2011 மற்றும் அரசு கடித எண் 5588/ பிந / 2009–10–2 நாள் 28.02.2011–ன் மூலம் உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் அரசாணை (நிலை) எண் 281 வருவாய்த்துறை நாள் 07.09.2017– ன் மூலம் மாவட்ட குழுவிற்கு நில மதிப்பினை நிர்ணயம் செய்வதற்கு நகர்புறங்களுக்கு ரூ. 2 கோடி மற்றும் அதற்கு மிகாமல் மற்றும் நடப்பு சந்தை மதிப்பிலிருந்து 225 சதவீதம் வரை எது அதிகபட்சமாக உள்ளதோ அதன்படி வழங்கிடவும், கிராமப்புறங்களுக்கு ரூ. 2 கோடி மற்றும் அதற்கு மிகாமல் மற்றும் நடப்பு சந்தை மதிப்பிலிருந்து 275 சதவீதம் வரை எது அதிகபட்சமாக உள்ளதோ அதன்படி வழங்கிடவும் மேலும் மாநில குழுவிற்கு நகர்புறங்களுக்கு ரூ. 2 கோடிக்கும் மேல் மற்றும் நடப்பு சந்தை மதிப்பிலிருந்து 225 சதவீதம் வரை எது அதிகபட்சமாக உள்ளதோ அதன்படி வழங்கிடவும், கிராமப்புறங்களுக்கு ரூ. 2 கோடிக்கும் மேல் மற்றும் நடப்பு சந்தை மதிப்பிலிருந்து 275 சதவீதம் வரை அனுமதிக்கப்பட்டும் இவற்றை தவிர்த்து அரசாணில் நகர்புறங்களுக்கு சந்தை மதிப்பிலிருந்து 225 சதவீதத்திற்கு மேல் அனுமதித்திடவும் மற்றும் கிராமபுறங்களுக்கு 275 சதவீதத்திற்கு அதிகமாக வழங்கிடவும் வழிவகை செய்து ஆணையிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
18	38	93	நலத்திட்டத்தின் கீழ் இனிவருங்காலங்களில் இலவச தையல் இயந்திரங்கள் வழங்கும்போது பயனாளிகளின் சான்றிதழ்களை சரிபார்க்குமாறு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்கப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
	(5)	(6)
	நலத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இலவச தையல் இயந்திரங்கள் வழங்கும்போது பயனாளிகளின் சான்றிதழ்களை சரிபார்க்குமாறு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்கப்பட்டு திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
19	39	98	பிற்படுத்தப்பட்ட மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகள் புதிய நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் இத்திட்டத்தின் கீழ் அதிக அளவில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் உள்ள நடைமுறை சிக்கல்களை விரைவில் களைந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையினை முழுமையாக பயன்படுத்தி விவசாயிகளுக்கு பலன் சென்று சேருவதற்கான துறையின் நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டுமென்றும் தேவையெனில் விதிமுறைகளை தளர்த்தி விவசாயிகளுக்கு மான்யம் வழங்கப்பட வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தை சேர்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த மான்யத்துடன் கூடிய வங்கிக்கடன் வழங்கும் திட்டம் 2007–2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

நிலத்தடி நீர் ஆதாரத்தன்மை தொடர்பாக அரசாணை (நிலை) எண்.51 பொதுப்பணித்துறை நாள்.11.2.2004 நாளிட்ட அரசாணையில் நிலத்தடி நீர் ஆதாரத்தன்மை தொடர்பாக பத்தி 6–ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"no schemes should be formulated in over exploited and critical blocks and in semi critical and safe blocks all the schemes should be formulated in consultation with State Ground and Surface Water Resources Data Centre of Water Resources Organisation in Public Works Department. The term 'scheme excludes energisation of agricultural pump sets by the Tamil Nadu Electricity Board".

ஒன்றியங்களை நான்கு வகைகளாக (Safe, Semi critical, and critical, over exploited) பிரிக்கப்பட்டு மாவட்ட வாரியாக நீர் நிலை குறித்து ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து அவற்றில் Safe and Semi critical என வகைப்படுத்தப்பட்ட ஒன்றியங்களில் மட்டுமே அரசு திட்டங்களை செயல்படுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் 2010–ம் ஆண்டிலிருந்து over exploited and critical என வகைபடுத்தப்பட்ட ஒன்றியங்களுக்கு நீர் பாசன திட்டத்தின் கீழ் மான்யத்தொகை வழங்கப்படவில்லை.

இந்நிலையில் இத்திட்டத்தினை செம்மையாகவும் சிறப்பாகவும், செயல்படுத்தவும் அதிக அளவில் விவசாயிகள் பயன்பெற வேண்டியும் இவ்வலுவலக க.எண்.பி3/263/2011, நாள் 23.09.2013–ல் பொதுப் பணித்துறையில் வெளியிடப்பட்டுள்ள அரசாணைகளில் தெரிவிக்கப்பட்ட Safe. Semi critical and over exploited என்ற பாகுபாடின்றி அனைத்து ஒன்றியங்களுக்கும் மானியத்துடன் கூடிய நீர்பாசன கடன் திட்டம் செம்மையாக செயல்பட அரசுக்கு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தால் முன்மொழிவு அனுப்பப்பட்டது.

இப்பொருள் தொடர்பாக அரசு க.எண். 12 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள். 28.01.2014–ல் அனைத்து மண்டலங்களிலும் viz Safe, Semi critical and over exploited ஆகிய பகுதிகளில் ஆழ்துளை கிணறு அமைப்பதற்கு

தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது. இவ்விவரம் இக்கழக கடிதத்தின் மூலம் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந.க.எண்.பி3/263/11 நாள்.10.02.2014) அரசு வழங்கிய தெளிவுரைக்குப் பின் மாவட்டங்களிலிருந்து அதிக அளவிலான முன்மொழிகள் பெறப்பட்டு மானியத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

அரசாணை எண். 57, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத்துறை நாள்.16.09.2014–ன் படி இத்திட்டத்தின் கீழ் செலவிடப்படாமல் உள்ள தொகையை அரசு கணக்கில் செலுத்துமாறும் வருங்காலங்களில் இத்திட்டத்திற்கென தேவைப்படும் நிதியை எதிர்வரும் நிதியாண்டில் வரவு செலவு திட்டத்தில் கோருமாறு அறிவுறுத்தப்பட்டது. மேற்படி அரசாணையில் அறிவுறுத்தியவாறு ரூ.3805.59 இலட்சம் 25.06.2015 அன்று அரசு கணக்கில் திரும்ப செலுத்தப்பட்டது (செலுத்து சீட்டு நகல் இணைப்பு)

இதனை தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் அரசிடமிருந்து நிதி பெற்று பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இது வரை இத்திட்டத்தின் கீழ் 3180 பயனாளிகளுக்கு ரூ.1460.25 லட்சம் மான்யத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
20	40	99	விவசாயிகளுக்கான நீர்ப்பாசன மானியம் மற்றும் கடன் திட்டத்தின் விவரங்களை சிறு, குறு விவசாயிகள் அறிந்துகொள்ளும் வண்ணம் எளிய முறையிலும், பெரிய அளவிலும் விளம்பரப்படுத்த வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.	இக்கழகம் மூலம் இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திடவும், மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் சிறு, குறு விவசாயிகளுக்கான மானியத்துடன் கூடிய நீர்பாசன கடன் திட்டம் குறித்த விளம்பர கையேடுகள் அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது. பொதுமக்கள் அறிந்துக்கொள்ளும் வண்ணம் அனைத்து மாவட்டத்தில் நடைப்பெற்ற பொருட்காட்சியிலும், திரை பலகையிலும், வீடியோ காட்சி மூலமாகவும் விளம்பர அட்டைகள் மூலமும் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பிரபலமான நாளேடுகளில் இலவசமாக பத்திரிக்கை செய்திகள் வெளியிடப்பட்டு வருகிறது. (பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்ட செய்தி நகல்கள் இணைக்கப்பட்டுள்ளன)	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மக்களுக்கு இக்கழகத்தின் மூலம் செயல்படுத்தப்படும் மானியத்துடன் கூடிய நீர்பாசன கடன் திட்டம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த இக்கழகத்தின் கடித எண். ந.க.பி3/711/2018, நாள். 7.09.2018–ல் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் விரிவான அறிவுறுத்தங்கள் கீழ்க்கண்டவாறு அளிக்கப்பட்டுள்ளது.

மக்கள் குறைத்தீர்க்கும் நாள், மனுநீதி நாள், வாரந்தோறும் வெள்ளிக் கிழமையன்று நடைபெறும் அம்மா திட்ட முகாம்கள், கிராமசபை கூட்டங்கள் போன்றவற்றில் மான்யத்துடன் கூடிய நீர்பாசன கடன் திட்டம் தொடர்பாக மக்களுக்கு தெளிவாக எடுத்துரைத்து கிராமப்புற மக்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைய செய்ய வேண்டும் மற்றும் மாவட்டங்களில் நடைபெறும் பொருட்காட்சியில் வருவாய்த்துறை மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் வைக்கப்படும் அரங்கில் இக்கழகம் மூலம் வழங்கப்படும் கடன் திட்டங்கள் மற்றும் மானியம் குறித்து விளம்பரப்படுத்தப்பட வேண்டும். பொதிகை தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி நிலையம் போன்றவற்றில் இக்கழகம் மூலம் வழங்கப்படும் மான்யத்தொகை குறித்து விளம்பரங்கள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இத்திட்டம் குறித்து பிரபலமான நாளேடுகளில் இலவச பத்திரிக்கை செய்திகள் வெளியிடப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



இணைப்பு–III

துறையிடமிருந்து பதில் வரப்பெற்று நடவடிக்கைகள் மேலும் தொடரப்பெற வேண்டிய பரிந்துரைகள்

இணைப்பு – 3

துறையிடமிருந்து பதில் வரப்பெற்று நடவடிக்கைகள் மேலும் தொடரப்பெற வேண்டிய பரிந்துரைகள்

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1	30	75	அனைத்து விடுதிகளிலும் உள்ள காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.	பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நல விடுதிகளில் அக்டோபர் 2012 மாதத்தில் காலியாக இருந்த சுமார் 1255 காலிப்பணியிடங்களை போர்க்கால அடிப்படையில் நிரப்பிடுவதற்கு ஏதுவாக அரசாணை எண்.129, பி.வ, மி.பி.வ(ம) சி.பா நலத்துறை, நாள் 6.11.2012, அரசாணை எண்.99, பி.வ, மி.பி.வ.(ம) சி.பா.நலத்துறை, நாள் 6.11.2012 மற்றும் அரசாணை எண்.130 பி.வ, மி.பி.வ(ம) சி.பா நலத்துறை, நாள் 7.11.2012 ஆகியவைகளின்படி அரசால் மாநில அளவிலான தேர்வுக்குழு அமைக்கப்பட்டு, மாவட்ட தலைநகரங்களில் நேர்காணல்கள் நடத்தப்பட்டு, சுமார் 780 பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன. தற்போது பட்டதாரி காப்பாளர் மற்றும் இடைநிலை காப்பாளர் காலிப் பணியிடங்களை தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் (TRB) நிரப்புவதற்கு அரசாணை (நிலை) எண் 20 பி.வ, மி.பி.வ (ம) சி.பா நலத்துறை நாள் 26.02.2019 ல் அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டதை தொடர்ந்து பணியிடங்களை உடனடியாக நிரப்பிட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.	விடுதிகளில் உள்ள காலிப்பணியிடங்கள் நிரப்ப துரித நடவடிக்கை எடுத்து, நிரப்பப்பட்டது குறித்து ஓர் அறிக்கையினை குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று குழு மீண்டும் வலியுறுத்துகிறது.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
2	31	76	2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையின்படி பணியாளர் குழுவின் ஒப்புதல் வாங்க வேண்டும் என்ற நிபந்தனையிலிருந்து விடுதிகளில் உள்ள கீழ்மட்ட பணியாளர் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு அவற்றின் கடமைகளின் முக்கியத்துவத்தை கருதி விலக்களிக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.	குழுவின் பரிந்துரைக்குப் பின் 2012 ஆம் ஆண்டில் விடுதிகளில் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு 780 காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டன. மேலும் தற்போது பட்டதாரி காப்பாளர் மற்றும் இடைநிலை காப்பாளர் காலிப் பணியிடங்களை தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் (TRB) நிரப்புவதற்கு அரசாணை (நிலை) எண் 20 பி.வ, மி.பி.வ (ம) சி.பா நலத்துறை நாள் 26.02.2019–ல் அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டதை தொடர்ந்து பணியிடங்களை உடனடியாக நிரப்பிட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. எனவே காலிப் பணியிடங்களை நிரப்பிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.	விடுதிகளில் உள்ள கீழ்மட்டப் பணியாளர்களை நிரப்புவதற்கு பணியாளர் குழுவின் ஒப்புதல் பெற வேண்டும் என்பதிலிருந்து விலக்களிக்க நடவடிக்கை எடுக்க குழு ஏற்கெனவே பரிந்துரை செய்துள்ளது. இப்பரிந்துரை குறித்து அரசு எடுத்த நடவடிக்கை குறித்த விவர அறிக்கையை 8 ஆண்டுகள் காலம் தாழ்த்தி குழுவிற்கு துறை அனுப்பி உள்ளதற்கு குழு தனது அதிருப்தியை தெரிவித்துக் கொள்கிறது. பரிந்துரை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய விவரத்தை ஒரு மாத காலத்திற்குள் குழுவிற்கு அனுப்ப குழு வலியுறுத்துகிறது.

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
3	33	80	இரவுக் காவலர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்படாத விடுதிகளுக்கு உடனடியாக பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
2005–2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் துவங்கப்பட்ட 462 பிவ. மி.பி.வ (ம) சீம நல மாணவர் விடுதிகளுக்கு, தலா ஒரு காவலர் (ம) ஏவலர் பணியிடத்தினை தோற்றுவிப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.	அரசின் பரிசீலனையில் உள்ள கருத்துருவின் மீது விரைவில் முடிவெடுத்து 8 ஆண்டுகள் முடிந்துள்ள நிலையில் குழுவின் பரிந்துரை அரசின் பரிசீலனையில் உள்ளதாக துறை தெரிவித்துள்ள பதிலை குழு ஏற்பதாக இல்லை. 462 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நல மாணவர் விடுதிகளுக்கு இரவுக் காவலர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டுமென்று குழு மீண்டும் வலியுறுத்துகிறது.

வரிசை எண். (1)	பரிந்துரை எண். (2)	பத்தி எண். (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
4	35	84	50 மாணவர்களுக்கு மேல் 100 மாணவர்களுக்குள்ளாக உள்ள விடுதிகளில் ஒரு உதவி சமையலர் பணியிடம் ஒப்பளிப்பு செய்து நியமனம் செய்யப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.	மாவட்டங்களிலுள்ள விடுதிகளிலிருந்து ஒப்பளிக்கப்பட்ட சமையலர் மற்றும் உதவி சமையலர் பணியிடங்களின் விவரங்கள் பெறப்பட்டு அதனடிப்படையில் அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டதை தொடர்ந்து அரசாணை எண் 78 பி.வ, மி.பி.வ (ம) சி.பா நலத்துறை நாள் 20.11.2018ல் மொத்தம் 196 சமையலர் பணியிடங்கள் கூடுதலாகவும் புதிதாகவும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவிக்கப்படுகிறது.	குழுவின் பரிந்துரையின்படி 50 மாணவர்களுக்கு மேல் 100 மாணவர்களுக்குள்ளாக உள்ள விடுதிகளில் உதவி சமையலர் கூடுதலாக நியமிக்கப்பட்டுள்ளனரா என குழு அறிய விரும்புகிறது. மேலும் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களில் சமையலர்கள் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளார்களா என்பதற்கான அறிக்கையை அளிக்க குழு வலியுறுத்துகிறது.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
5	36	88	இலவச வீட்டுமனைப்பட்டா பெற்ற பயனாளிகள் அந்நிலத்தில் வீடுகள் கட்டி உள்ளனரா என்பது குறித்து அனைத்து மாவட்டங்களிலும் ஒரு சிறப்பு ஆய்வினை துறை மேற்கொள்ள வேண்டுமென்றும் இது குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்க வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
இலவச வீட்டுமனைப்பட்டா 2017–2018 ஆண்டு முடிய மொத்தம் 2,22,411 எண்ணிக்கையிலான பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவற்றில், 36,136 பயனாளிகள் வீடு கட்டி வாழ்ந்து வருகின்றனர் என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.	வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட அனைத்து பயனாளிகளும் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் வீடுகள் கட்டி வாழ்வதை துறை உறுதி செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அது குறித்த ஓர் அறிக்கை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பெறவேண்டும் என்று குழு மீண்டும் வலியுறுத்துகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கி. சீனிவாசன்
செயலாளர்.